**DEPOSITION OF WITNESS**

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of District Munsif cum Judicial Magistrate Court, Usilampatti**

**Case No. STC - 585/2022**

**Deposition of Witness for Prosecution : P.W. 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : **மருது** | Caste | : |
| Father/Husband Name | : **பெருமாள்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**(Accused present)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 22.07.2025**

**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை**

நான் ஒப்பந்தரராக 20 ஆண்டுகள் வேலை செய்து வருகிறேன். எதிரியை 10 ஆண்டுகளாக பழக்கம். எதிரிக்கு பணம் கொடுத்ததுபோல் வேறு எத்தனை நபர்களுக்கு பணம் கொடுத்துள்ளேன் என்றால் வேறு யாருக்கும் கொடுக்கவில்லை. நான் கந்துவட்டிக்கு நிறைய நபர்களுக்கு கடன் கொடுத்து அவர்களிடமிருந்து காசோலையை பெற்று, வழக்கு தாக்கல் செய்வேன் என்றால் சரியல்ல. எதிரியிடம் காசோலையை தவிர வேறு என்ன ஆவணங்கள் வாங்கினேன் என்றால் வேறு எந்த ஒரு ஆவணமும் வாங்கவில்லை. 15.04.2021 ஆம் தேதியில் எதிரி என்னிடம் ரூபாய் 2,50,000/- வட்டிக்கு கடன் வாங்கினார் என்றால் சரியல்ல. மேற்படி தேதியில் மேற்படி கடனை பெறும்போது எதிரியிடமிருந்து எழுதப்படாத இரண்டு கடன் உறுதி பத்திரம் வாங்கிகொண்டேன் என்றால் சரியல்ல. எதிரி கடன் வாங்கிய தேதியிலிருந்து இவ்வழக்கு தாக்கல் செய்யும்வரை

தவறாமல் எனக்கு 3% வட்டி செலுத்தி வந்தார் என்றால் சரியல்ல. 06.08.2022 ஆம் தேதியில் எதிரியிடமிருந்து மேலும் இரண்டு காசோலையை எதிரியிடமிருந்து வாங்கினேன் என்றால் சரியல்ல. அந்த இரண்டு காசோலையில் ஒரு காசோலையை நிரப்பி பொய்யாக இந்த வழக்கு எதிரி மீது தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 22.08.2022 அன்று எதிரியின் வீட்டிற்கு சென்று கொடுத்த பணமான மேற்படி ரூபாய் 2,50,000/—ஐ திரும்ப கேட்டேன் என்றால் சரியல்ல. அதற்கு எதிரி 6 மாத கால அவகாசம் என்னிடம் கேட்டார் என்றால் சரியல்ல. எதிரிக்கு நான் ரூபாய் 5,00,000/— எவ்வாறு கொடுத்தேன் என்றால் ரொக்கமாக கொடுத்தேன். யாராவது சாட்சிகள் முன்பாக கொடுத்தேனா என்றால் இல்லை. நான் எனது மனுவில் அவசர கடனுக்காகவும், குடும்ப செலவுக்காகவும் ரூபாய் 5,00,000/— எதிரிக்கு கொடுத்தாகவும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எதிரி என்ன வேலை செய்கிறார் என்று தெரியுமா என்றால் எதிரி ஒப்பந்தகாரராகவும், டிராக்டர் வைத்து தொழில் செய்து வருகிறார். எதிரி தன் சில்லறை கடனை தீர்ப்பதற்காகவும், குடும்ப செலவிற்காகவும் வட்டிகாகத்தான் என்னிடம் கடன் வாங்கினார் என்றாலும், கைமாற்றாக வாங்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் சொன்ன தேதியில் எதிரி என்னிடம் கடன் வாங்கவில்லை என்றால் சரியல்ல. 2021 ஆம் வருடம் எதிரி 2,50,000/— மட்டும் வாங்கினார் என்றாலும், நான் இடையில் எதிரியிடமிருந்து வாங்கிய காசோலையை மோசடியாக பயன்படுத்தி ரூபாய் 5,00,000/— என்று நிரப்பி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் ரூபாய் 5,00,000/— கடனாக பெறவில்லை என்றாலும், வழக்கிற்காக நான் பொய்யாக காசோலையை நிரப்பி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், அதனால்

இவ்வழக்கை தள்ளுபடி செய்யகூடியது என்றால் சரியல்ல. ரூபாய் 5,00,000/- என்பது மிக பெரிய தொகை என்பதால் அதை நான் சாட்சிகள் இல்லாமல் எதிரிக்கு கொடுத்திருக்கமாட்டேன் என்றால் சரியல்ல. காசோலையை எதிரி என் முன்னே நிரப்பி கொடுத்தார். எதிரி காசோலையில் கையெழுத்து மட்டும் போட்டு கொடுத்தார் என்றாலும், அதில் உள்ள மற்ற விபரங்களை நான் எதிரிக்கு தெரியாமல் நிரப்பி இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

S.d. Maruthu
Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.G.Sathia Narayanan,B.A.B.L.,
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.